# திருமதி ராஜம் கிருஷ்ணன் படைப்புகள்

# மாறி மாறிப் பின்னும்

## 11

சுதா ஓடி வருகிறாள்.

முதல் நாள் போட்டிருந்த அதே சட்டை...

ரேவு அலறுகையில், சுதா அவனை மெள்ளப் பிடிக்கச் சொல்லி உள்ளே கொண்டு வருகிறார்கள். முகத்தில் தண்ணீர் அடிக்கிறாள். விழிகள் செருகினாற்போல் கிடக்கிறான்.

“கலவரப்படாதீங்க மாமி, ஒண்ணுமில்ல. நான் போய் ஒரு ஆட்டோ கொண்டு வரேன். டாக்டர்ட்ட கொண்டு போகலாம்...” என்றூ விரைந்து ஓடுகிறாள்.

இவள் உணர்வுகளை நினைவுகள் முறுக்கிப் பிழிகின்றன. ஏனிப்படி வயிறு துடிக்கிறது? பெற்ற பாசமா? கண்கள் துளிக்கின்றன.

ஆட்டோக்காரனும் சுதாவுமாக, அவனைக் கீழே கூட்டி வந்து உட்கார்த்திக் கொண்டு, போகிறார்கள்.

வண்டி எங்கே செல்கிறதென்று தெரியவில்லை. அடையாறு சர்க்கிள் தாண்டிச் செல்கிறது. ஒரு ‘இருபத்து நாலு மணிநேர’ சிகிச்சை நிறுவனம் என்று சிவப்பு அடையாளமும் டாக்டர்களின் பட்டியல் விவரமுமாக மாடிகளாக உயர்ந்து நிற்கும் ஆஸ்பத்திரி.

‘வேங்கடாசலபதி! உன் கோயிலில் வந்து மாவிளக்கு போடுகிறேன். இந்தப் பிள்ளையைப் பிடித்த சனி இத்துடன் போகட்டும். என் வயிற்றில் பால் வார்த்து விடு... சோதனைகள் போதும்!” என்று ஓராயிரம் பிரார்த்தனைகளை மனது எண்ணுகிறது. ஒரு ஸ்ட்ரெச்சரைக் கொண்டு வந்து



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

பிள்ளையைக் கொண்டு செல்கையில், ரேவு ஓடுகிறாள். சுதா, உள்ளே அநுமதிக்கான தேவைகளுக்காகத் தாமதிக்கிறாள்.

கீழே, அவசர சிகிச்சைப் பிரிவில் தான் படுக்க வைத்திருக்கிறார்கள். சிறிது நேரம் சென்ற பின் யாரோ டாக்டரும் நர்சும் போய்ப் பார்க்கிறார்கள். ரேவு இவ்வுலக நினைவே கழன்றாற் போல் - தோன்ற நிற்கிறாள்.

ட்ரிப் கொடுக்க எடுத்துச் செல்வது போல், அந்தச் சாதனங்களை உள்ளே கொண்டு செல்கின்றனர்.

அவள் நேரம், இடம் என்ற வட்டங்களை விட்டு அகன்று அகன்று தூசியாகப் போகிறாள். தூசிக்கு வீடு, வாசல், குடும்பம், மானம், மரியாதை என்பதெல்லாம் இல்லை. தூசிக்கு... எந்தப் பற்றுதலும் இல்லை. நான் தூசி... தூசி... வெறும் தூசி...

“ரேவு மாமி... டாக்டர்ட்ட சொல்லி இருக்கேன். ஏதோ பாய்ஸனிங் போல இருக்குமோன்னு சந்தேகப்பட்டு... உள்ளேருந்து எல்லாம் வெளியே கொண்டு வந்து, ட்ரிப் குடுத்திருக்கா. எனக்கு ட்யூட்டிக்குப் போகணும். நான் வீட்டுக்குப் போய், ரகு வந்ததும் வரச் சொல்லி அனுப்பறேன். நீங்க தைரியமா இருங்கோ மாமி...”

சுதாவின் கைகளை ரேவு கெட்டியாகப் பற்றிக் கொள்கிறாள். கண்ணீர் மளமளவென்று பெருகுகிறது.

சுதா தன் கைகளை விடுவித்துக் கொண்டு அவள் கண்களைத் துடைக்கிறாள். “கவலைப்படாதேங்கோ! அவன் ஏதோ ட்ரக் சாப்பிட்டிருக்கான். இந்த சமயத்தில் கவனமாப் பாத்துக்கணும். ஏதோ அதுவாக வெளி வந்துடுத்து. நாதன் வந்ததும் ரகுவை விட்டுப் பேசச் சொல்றேன். இப்ப போனதும் உங்களுக்கும் பரத்துக்கும் சாப்பாடு குடுத்தனுப்புறேன். ரகு வருவார்... வரட்டுமா?...”

அவளுக்கு மாலை நேர ‘ட்யூட்டி’...



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

ரேவு மெள்ள வராந்தாவில் நடந்து, பெரிய ஹாலில் வரிசையாகப் போடப்பட்ட படுக்கைகளில், பச்சை ‘ஸ்கிரீன்’ தடுக்கப்பட்ட ஒன்றின் அருகில் வந்து பார்க்கிறாள். அவன் தூங்குபவன் போல் கிடக்கிறான். கைவழி சொட்டுச் சாரம் இறங்குகிறது. அருகில் ஒரு இளம் டாக்டர் கை பிடித்துப் பார்க்கிறான்.

நிமிர்ந்து, “உங்க பையனா?” என்று கேட்கிறான்.

‘ஆம்’ என்று அவள் தலையாட்டுகிறாள்.

“எத்தனை நாளா இந்தப் பழக்கம்னு தெரியுமா?”

“எந்தப் பழக்கம்?...”

“அவன் ஏதோ ட்ரக் - போதை மருந்து சாப்பிட்டிருக்கிறான். அதைக் கூடக் கவனிக்கலியா?”

“அப்படி எதுவும் இருக்காது... நான் ஒரு நாள், அம்மாக்கு உடம்பு சரியில்லன்னு தம்பி வீட்டுக்குப் போனேன். அப்பா கோவிச்சிட்டு அவனை அடிச்சிருக்கார்...”

“நீங்க எதுக்கு இப்ப மறைக்கிறீங்க? பையன் முழுசுமா கைவிட்டுப் போகுமுன்ன டி அடிக்க்ஷன் ட்ரீட்மெண்ட் குடுங்க. இது முத்திப் போகக்கூடிய கேஸ்... ராத்திரி ஒன்பது மணிக்கு மேல நீங்க கூட்டிட்டுப் போகலாம்... கொஞ்ச நேரம் கழிச்சி கண் முழிச்சிப் பசின்னு சொன்னா, இட்டிலியோ பால் கஞ்சியோ குடுங்கோ...” என்று ஈரமே இல்லாத குரலில் கூறிவிட்டுப் போகிறான்.

ரேவுவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கையில் ஒரு எழுபது எண்பது ரூபாய் போல் பர்சில் பணம் வைத்துக் கொண்டிருக்கிறாள். ஆஸ்பத்திரிக்கு முதலில் சுதா ஐநூறு ரூபாய் கட்டியிருக்கிறாள். புருஷனுக்குத் தெரியாமல் இருக்க முடியுமா?...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

இந்தப் பிள்ளைக்கு இட்டிலி எங்கிருந்து வாங்கிக் கொடுக்க? இந்த இடமே புதிது...

அங்கே மேசையருகில் ஏதோ எழுதும் நர்சிடம், “ஸிஸ்டர், இங்கே பக்கத்தில் ஓட்டல் இருக்கா... எதானும்?” என்று கேட்கிறாள்.

“ரோட் திரும்பிப் போனா, முல்லை ரெஸ்டாரண்ட் இருக்குது. அங்கே எல்லாம் கிடைக்குது...”

அவள் நடந்து சென்று, ஓட்டல் கல்லாவில் காத்து, ரவை இட்டிலி ஒரு பார்சல் வாங்கிக் கொண்டு திரும்புகிறாள்.

அவள் வரும்போதே, அவன் விழித்திருக்கிறான்.

“அம்மா... அம்மா...” என்று முனகுகிறான்.

“என்னடா கண்ணா” என்ற குரலில், உள்ளத்தின் ஆழத்தில் புதைந்த வெறுப்பும் கோபமும் பிரதிபலிக்கவில்லை.

அவன் முடியை இதமாகத் தடவிவிடுகிறாள். “நீ இப்படி எல்லாம் கெட்ட சகவாசம் வச்சுக்கலாமா கண்ணா? அப்பா வேற கோவிச்சிட்டு அடிச்சிருக்கார், வேம்பு மாமா பணத்தை, எடுத்துண்டு வரலாமா?”

அவன் செவிகளில் அதெல்லாம் விழுந்ததாகவே தெரியவில்லை.

“அம்மா... அம்மா... பசிக்குதம்மா... ரொம்ப பசி...” அவன் கண்களில் மூக்கில் நீராக வழிகிறது.

துடைக்கிறாள் துண்டெடுத்து.

“அழாதே இந்தா, இட்டிலி பார்சல் வாங்கிட்டு வந்திருக்கேன். ட்ரிப் இறங்குது ஆடாதே...”

நர்ஸ் வருகிறாள். காலியான சொட்டுச்சாரக் குழாயை அப்புறப்படுத்துகிறாள். “சாப்பாடு குடுங்க” என்று கூறிவிட்டுப் போகிறாள்.

மணி ஆறடிக்கும் நேரம். ஆஸ்பத்திரியில் நோயாளிகளைப் பார்க்க வரும் கூட்டம் நெருங்குகிறது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

அவனுக்கு இட்டிலியும் தண்ணீரும் கொடுத்து ஆசுவாசப் படுத்துகிறாள். முதுகில் நர்சிடம் சொல்லி ஏதோ காயத்துக்கு மருந்து தடவி இதம் செய்கிறாள்.

அவள் வராந்தாவில் வந்து நின்று, கூட்டத்தில் கணவனோ, ராம்ஜியோ வருகிறானோ என்று பார்க்கிறாள்.

மாலை மங்கி இருள் வருகிறது. அவசரமான பிரசவ கேஸ் ஒன்று... ஸ்ட்ரெச்சரில் கொண்டு போகிறார்கள்.

என்ன வேதனைகள்!

இந்த பரத்தைப் பெற ஒரு வாரம் சிரமப்பட்டாள். ஈசுவரா, இப்படியே நான் சாகக்கூடாதா என்று அப்போது விம்மி அழுதாள். ஒரு பெண்ணுக்குத் தாய்மையின் தலையாய நோவும், தாயின் இதத்தில் பொறுத்துக் கொள்ளும் மனவலிமையில் கரைந்து போகுமாம். ஈசுவரன் செட்டிப் பெண்ணுக்குத் தாயாக வந்தாராம். தரும ஆஸ்பத்திரி - கோஷா ஆஸ்பத்திரியில் சிவப்பு ரவிக்கை போட்ட ஒரு மலையாள ஆயா... நெற்றியில் பளிச்சென்ற சிவப்புப் பொட்டுடன் இவளுக்கு மருத்துவம் செய்யப்பட்ட அறையில் எவ்வளவு இதமாகப் பேசினாள்! இவள் தான் ஈசுவரனோ என்று நினைத்தாள். ஆயுதம் போட்டுக் குழந்தையை எடுத்த அந்த டாக்டர்... எல்லாம் நினைவில் வந்து முட்டுகின்றன.

இவள் எந்த மலையில், எதற்காக இன்னும் மூச்சு முட்ட ஏறிக் கொண்டிருக்கிறாள்? யாருக்காக? எந்த இலட்சியத்துக்காக? ஏனிப்படி எல்லாம் நடக்கிறது? இந்த வாழ்க்கையில் எந்த நோக்கத்துக்காக இத்தனை துன்பங்கள், வேதனைகள், பொறுத்துக் கொள்ள வேண்டிய அழுத்தங்கள்?... இது என்ன மாசம்? என்ன கிழமை, நாட்கள்...?

இவள் எத்தனை நேரமாக ந்த வராந்தாச் சுவரில் சாய்ந்து நிற்கிறாள் என்ற உணர்வே கரைகிறது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

"...மாமி! ரேவு மாமி...!"

திடுக்கிட்டுப் பார்க்கிறாள், ரகு... ஒயர் பையில் டிபன் காரியர் சாப்பாடு... தண்ணீர், தட்டு...

"அடாடா... நீங்களா...? ராம்ஜி அப்பா வரல?..."

"அவர் நான் வரும் வரையிலும் வீட்டுக்கு வரல; சுதா ஃபோன் பண்ணினாள். அவர் ஆபீசில் இல்லை. 'மெஸேஜ்' சொல்லிருக்கேன்னு சொன்னாள்... பரத் எப்படி இருக்கிறான்? இந்தாங்க, சாப்பாடு..." இவளைக் குற்ற உணர்வு குத்துகிறது.

"உங்களுக்கு எத்தனை சிரமம் என்னால்? நீங்க ராம்ஜிட்ட குடுத்து அனுப்பலாமே?..." என்று பையை வாங்கிக் கொண்டு ரூமுக்கு வருகிறாள். அங்கே புதிதாக வந்த ட்யூட்டி டாக்டர், அவனைப் பரிசோதித்துக் கொண்டிருக்கிறாள்.

ரகுவைப் பார்த்ததும், அவரிடம் அவள், "நீங்க வீட்டுக்குக் கூட்டிப் போகலாம். ஆனால் நீங்க, இப்பவே, இந்தப் பழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கணும்" என்று அவர் தாம் தந்தை என்ற ஊகத்தில் பேசுகிறாள்.

"அவப்பா ஊரில் இல்லை. நான் சொல்றேன். இது மதர்..." என்று காட்டுகிறார்.

"ஏம்மா, பையனிடம் பிரியமாக நடந்துக்குங்க... இப்ப இதுக்கு டி-அடிக்ஷன் சென்டர்ல காட்டுங்க ஆமாம்..." என்று கூறிவிட்டுப் போகிறாள்.

"உங்களுக்கு எத்தனை சிரமம்! கூடப் பிறக்காத தோஷம். சுதாவுக்கும் உங்களுக்கும் நான் எப்படிக் கடனை அடைக்கப் போகிறேன்!"

"அப்படியெல்லாம் ஏன் வித்தியாசமாக நினைக்கிறீங்க மாமி! சுதாக்கு சந்தோஷம், எனக்கு சந்தோஷம். சுதா ரொம்ப அருமையானவள். மனுஷாபிமானம் இல்லேன்னா, மனிதராப் பிறந்தாலும் மிருகந்தான்னு சொல்லுவ. நீங்க கவலைப் படாதீங்க. பரத்தை நிச்சயமா இந்தப்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

பழக்கத்திலிருந்து காப்பாத்திடலாம். ஒரே கஷ்டம், உங்க... அவர், நாதன். கோவாபரேட் பண்ணணும். பிரச்னையே அதனால வந்ததுதான்.”

.....

“ஏம்ப்பா பரத், வளர்ந்து சாதிக்க வேண்டிய பையன், அம்மா, அப்பா, பிரியமா இருக்கறப்ப, இப்படியெல்லாம் கெடுத்துக்கலாமா?”

அப்போது, பகலில் அவனை உள்ளே கொண்டு வந்த போது பார்த்த நர்ஸ் வருகிறாள். வயதான பெண்மணி.

“ஏன் ஸார்? பையனை இப்படி அடிக்கலாமா? மார்க் குறைஞ்சி போகிறதுதான். தப்பு செய்யறதுதான். வளர்ந்த பிள்ளைகளை அடிக்கும் பழக்கம் வைத்துக் கொள்ளக் கூடாது. இப்ப பாருங்க, எத்தனை கஷ்டம்!...”

“ஸிஸ்டர், இவர் அப்பாவுமில்லை. இவர் அடிக்கவுமில்ல. இவர் என் அண்ணன்...” என்று ரேவு முன்னுக்கு வந்து சொல்கிறாள்.

அவனுக்கு அங்கேயே சாப்பாடு கொடுக்கிறாள்.

ஆஸ்பத்திரிக்குத்தான் முன்னமேயே சுதா பணம் கட்டிவிட்டாளே?... அவர் ஓர் ஆட்டோவைக் கொண்டு வருகிறார். “நீங்கள் ரெண்டு பேரும் இதில் போய் இறங்குங்கள் மாமி, நான் பின்னே வரேன்...” என்று அனுப்புகிறார்.

வீட்டில் மேலே விளக்கு எரிகிறது. வாசற் கதவு உட்புறம் பூட்டப்பட்டு இருக்கிறது. ராம்ஜி சுதாவின் வீட்டுப் பக்கம் தான் படித்துக் கொண்டிருக்கிறான். கதவைத் தட்டித் திறக்கச் சொல்கிறாள்.

நடுக் கதவைத் திறந்து உள்ளே வந்ததும், பரத் படுக்கையை விரித்துப் படுத்துக் கொள்கிறான்.

ரேவு சமையலறைப் பக்கம் சென்று பார்க்கிறாள்.

அடுப்படி துப்புரவாக இருக்கிறது. சாப்பாடோ, பாலோ எதுவும் இல்லை. டிபன் கேரியரில் ரகு கொண்டு வந்த சாப்பாட்டில் பாதி... சாதம்,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

குழம்பு, அவரைக்காய், மோர், ஊறுகாய் - எல்லாம் இருக்கின்றன. ராம்ஜி கதவைத் திறந்தானே ஒழிய, 'அம்மா, சாப்பிட்டாயா? என்ன ஆச்சு, என்ன சமாசாரம்' என்று எதுவுமே விசாரிக்கவில்லை. எதிலும் தனக்குச் சம்பந்தமே இல்லை என்று அறிவிப்பவன் போல், புத்தகத்தில் தலையைக் கவிழ்த்துக் கொள்கிறான்.

அவள் நிலைப்படியில் நின்று கொண்டு, அவனையே பார்க்கிறாள். முதல் நாள் வரை, அவனை இவள் அந்தரங்கமான அன்புடன் மனசில் போற்றிக் கொண்டிருந்திருக்கிறாள். தன் உடலில் ஒரு பகுதி என்று ஒட்டிக் கொண்டிருந்திருக்கிறாள். ஆனால் இன்று...

அப்படி இந்தப் பிள்ளை இன்று விட்டுப் போகும்படி இவள் மன்னிக்க முடியாத எந்தத் தப்பைச் செய்துவிட்டாள்? நிமிர்ந்து பார்த்து, ஒரு வார்த்தை பரிவுடன், பாசத்துடன் கேட்க முடியாதபடி, இவள் என்ன தவறு செய்தாள்? பெற்ற தாய்! இவன் டாக்டருக்குப் படிக்கப் போகிறானாம்!

இவனிடம் மட்டும் தானே நம்பிக்கை வைத்துச் சொல்லிவிட்டுப் போனாள்? ஆத்திரம் பொங்கி வருகிறது.

அணை போடுகிறாள். "சாப்பிட்டியா ராம்ஜி?... அப்பா வந்துட்டாரா?"

"ம்..." நிமிராமல் ஒரே பதில்.

"நீ சமைச்சியா?"

"இல்ல. அப்பாவும் நானும் ஓட்டல்ல சாப்பிட்டோம்."

"ஓ...? நேத்திக்கு உங்கப்பா ரொம்பச் சண்டை போட்டாரா? பரத்தை எதுக்கு அப்படிப் போட்டு அடிச்சிருக்கார்?"

அவன் இப்போதும் தலை நிமிர்ந்து அவளைப் பார்க்கவில்லை. பிசிறில்லாத உறுதிக் குரலில், "அப்பா ஒண்ணும் அவனை அடிக்கல!" என்று தெளிவு செய்கிறான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

கடலை உடைபட்டுப் பருப்பு இரண்டாகச் சிதறினாற் போல் இருக்கிறது.

“பின்ன யார்டா அப்படி அடிச்சது?”

“அவன் அப்பா அடிச்சார்னு பழியப் போட்டானே, அவனையேக் கேட்டுப் பார்!”

இவளுக்குப் புரியவில்லை. பின் யார் இப்படி அடித்திருப்பார்கள்...

“பரத்...? அப்பா அடிக்கலன்னா, யார் அடிச்சது? ரத்த விளாறா இப்படி?” அவன் தூங்குவது போல் பாவனை செய்கிறான்.

அவள் மீண்டும் ராம்ஜியிடம் வருகிறாள்.

“யார் அடிச்சதுடா? எதுக்கு இப்படி நாடகம் ஆடுறேள் எல்லாம்?”

“அம்மா, எனக்குப் பரீட்சை. இது எனக்கு வாழ்வா, இல்லையான்ற பிரச்னை லட்சியம். என்னை டிஸ்டர்ப் பண்ணாம போ!” நடுக்கதவைச் சாத்துகிறான்...

முகத்திலடித்தாற் போல் இருக்கிறது.

பின் இவனை யார் அடித்தது? படிக்கவில்லை என்று ஸ்கூலில் அடித்தார்களா? அங்கே நூற்றுக்குத் தொண்ணூறும் பெண் டீச்சர்கள்... எவள் இப்படி அடிச்சிருப்பாள்? பிரின்ஸிபால் ஆண்.... அவர் இப்படி அடிப்பவர் இல்லையே? எங்கேனும் திருடி, அடி பட்டானோ? இந்த வீட்டில் நல்லது, கெட்டது எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்க இவள் ஒருத்திதானா? உழைப்பு, பொறுமை, பாரம் எல்லாம் இவளுக்குத்தானா? தடதடவென்று படியேறிச் செல்கிறாள். அவள் வருவதை அறிந்து வேண்டுமென்றே அவன் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கிறான்.

அவள் விளக்கைப் போடுகிறாள்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

அன்று பகலில், அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கோரிக் கெஞ்சி, அந்த நிழலில் தஞ்சம் புக வேண்டும் என்று நினைத்த நினைப்புக்கள் அடியோடு தகர்ந்து போகின்றன.

படுத்த வாக்கில் இருந்த அவன் தோளைப் பற்றி உலுக்குகிறாள்.

அவன் முகம்... மீசை... திறந்த மார்பு, சங்கிலி... லுங்கி... எல்லாம் மேலும் மேலும் வெறுப்பை ஊட்டுகின்றன.

இவனெல்லாம்... உசந்த சாதிப் பிராமணன்... சீ...!

"எதுக்கு இப்படி ஒண்ணும் தெரியாதது போல் பாசாங்கு செய்யறே...? இந்த வீட்டில், இருபத்தஞ்சு வருஷமா உழைச்சுக் கொட்டி, உங்க அக்கிரமம் எல்லாம் சகிச்சிண்டிருந்தேன். எனக்கும் பொறுமை போயிட்டது! அந்தப் பையன், இப்படி அடிபட்டு வந்து எதையோ மருந்தைத் தின்னுட்டுக் கிடந்தான். அவனைத் தூக்கிண்டு ஆஸ்பத்திரிக்குப் போய், ஊரே, தாயேன்னு கெஞ்சிக் கூட்டிண்டு வரேன். உங்க சுகம் ஒண்ணுக்குத்தான் வீடா? ஆபத்துன்னதும் ஓடி வந்து, காசு பணம் பாராம ஒத்தாசை செஞ்ச மனுசாளைக் கூடத் தூக்கி எறியும்படி, அப்படி என்ன உங்களுக்கு?" அவள் பேசி முடிக்கவில்லை.

அவன் பேய் போல் அவள் முகத்திலும் மேலும் அடிக்கிறான். புடைவையை இழுத்துப் போட்டு இம்சிக்கிறான்.

வெறியாட்டம் ஓயுமுன் அவள் முகம் வீங்கிப் போகிறது. ரவிக்கை கிழிந்து தொங்குகிறது.

"...நீ... மனிசன்... மிருகம் கூட இல்லை. பேய், கேடு கெட்ட பேய்."

"பேய்... பேய்தான். நீ... தேவடியா? அவனும் இவனும் உனக்கு எதுக்குடீ செய்யறா? உன் கூட்டமே ஊர் மேயும் கூட்டம். சொந்தப் புருசனுக்கே கூட்டிக் கொடுக்கும் ஒரு கழுதையக் குடி வச்சிட்டு, போன்னாலும் போகாம என் குடும்பத்துக்கு உலை வைக்கிறத சகிக்கிறேன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

என் ஆபீசில் வந்து என்னப் பத்தி விசாரிக்கிறா... நான் ஆம்பள, எப்படி வேணாலும் இருப்பேண்டி! ஆனா பொம்பலயால மானம் போறதச் சகிக்க முடியாது! வீட்டக் காலி பண்ணுன்னா, வாடகை அதிகம் தரேன்னு எந்தத் திமிர்ல சொல்றா!... சீ! அவன் ஒரு ஆம்புள...! நீ எங்கேடி வீட்ட விட்டு ஊர் மேயப் போன? இது... ஒரு கண்ணியமான குடும்பம். தெரியாத்தனமா, என் அப்பா, இப்படி மானம் போக ஒண்ணைக் கட்டி வச்சு, நான் பொறுக்கிறேன்... போடி வெளில! உன்னை இப்படியே அனுப்பிச்சாத்தான் நீ ஒழிஞ்சு போவ. போய் எங்கானும் விழுந்து செத்துத் தொலை!"

கடவுளே!... இவனிடம் எதைப் பேசுவது?

நெஞ்சும் உடலும் எரிகிறது. மொட்டை மாடியில் புடைவையைச் சுற்றிக் கொண்டு வந்து குலுங்கக் குலுங்க அழுகிறாள்.

இவளுக்கு உதவி செய்தவர்களுக்கு இப்படியெல்லாம் கூசாமல் பழி சுமத்துகிறானே!

இந்த வீடு... இவளிடம் பிரியமாக இருப்பான் என்று நம்பிய பிள்ளை... எல்லாம் பொய்...

இந்த நடுநிசியில் இவள் எங்கு செல்வாள்?

பின்னால் சென்று, கிரசினை ஏற்றிக் கொண்டு நெருப்புப் பற்ற வைத்துக் கொள்ளலாமா?... இவள் பெண்ணாய்ப் பிறந்து என்ன லாபம்? யாருக்கு... இவள் செத்தால் யார் வருத்தப்படப் போகிறார்கள்? இவள் இல்லாமல் வீடு... குடும்பம் விழுந்து விடவில்லை.

இது வரையிலும் ரேவு இப்படி நினைத்ததில்லை. தான் இல்லாது போனால் வீடு... நடக்காது என்ற மாதிரியான பொறுப்புணர்வு ஒட்டிக் கொண்டு இருந்தது. அதன் உயிர்ச்சக்தி, ஒளிவிளக்கு, லட்சுமீகரம் என்றெல்லாம் ஒரு பொய்யைச் சுமந்து கொண்டிருந்தாளே?

அந்தப் பொய் எப்படி இவளுள் ஒரு பகுதியாகவே வளர்ந்திருந்தது?



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

பதின்மூன்று வயசில் இவளைக் கல்யாணம் - என்று கயிற்றைக் கட்டி, மாமியாருக்கும் பாட்டிக்கும் சேவை செய்ய, மலஜலம் எடுக்க, புருஷனுக்கு ஈடு கொடுக்க என்று பூட்டி வைத்தார்களே, அப்போது வந்ததா? நடுத்தெருவில் வந்து விழுந்திருக்க வேண்டிய பூவை, அலையவிடாமல் நிழல் தந்து, அடுத்த வேளைச் சோற்றுக்கு அலையவிடாமல் 'பாதுகாத்தார்களே', அதனால் வந்ததா? இவளுக்கு ஒரு குடும்ப 'அந்தஸ்து', இன்னார் வீட்டு மாட்டுப்பெண் என்று, தாலியும் குங்குமமுமாக, குருமடத்தில், சாதிக்குரிய சேலைக்கட்டுடன் 'உயர் சமூகம்' அங்கீகரிக்கக் கூடியதே, அப்போது வந்ததா? அவனும் பஞ்சகச்சம் உடுத்தி, வேசம் பூண்டு, உத்தம புருசனாக, இவளுக்குப் புரியாத மந்திரங்களைச் சொல்லி இவளுடன் சுவாமிகளை விழுந்து பணியும் போது, இவள் இவன் 'சகதர்மிணி'யாக, அந்த வீட்டின் 'தலைவி' என்ற பொறுப்பில், இன்னமும் தன்னைப் பொறுப்புள்ளவளாக உயர்த்திக் கொண்டாளே! இரண்டு பிள்ளைகளைப் பெற்ற தாய் என்று ஒரு குருட்டு வட்டத்தில் செக்கு மாடாகச் சுழன்றிருக்கிறாள்.

இன்று, இந்தக் குருட்டு வட்டம் தகர்கிறது; தகர்ந்து விட்டது. இந்த அரணை உடைத்தவன் அவன் தான். அவன் தறிகெட்ட மாடாக உடைத்து, அவளுக்கு விடுதலை தருகிறான். ஆனால் அவள் ஏன் சாக வேண்டும்? எதற்காகக் கிரசினை ஊற்றிக் கொண்டு பற்றி எரிய வேண்டும்?

சாக வேண்டாம் என்றால்...

அவள் நினைத்துப் பார்க்கிறாள்.

இத்தனை வயசில்... தனக்கு இன்னது வேண்டும், இன்னது பிடிக்கும் என்று அவளுக்கு ஏதேனும் ஆசை இருந்திருக்கிறதா? அதற்காக அவள் ஏதேனும் செய்திருக்கிறாளா? அவள்... அவளுக்காக, தனக்காக...

புத்தகங்கள்... பத்திரிகைகள்... இவளுக்காக வாங்கப் பட்டிருக்கவில்லை. ஆசையாக, பிரியமாக, ஒரு முழம் பூ, வாங்கித்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

தந்ததில்லை அந்தக் கணவன். பூசை விசேசம் என்று வாங்கப்பட்ட பூ - இவள் சுமங்கலிக் கோலத்தை நிலைநாட்ட ஈர முடிப்பில் இடம் பெறும்.

படிக்கும் ஆசை, பல விஷயங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை, அது, சுதாவினால் தான் நிறைவேறியிருக்கிறது.

புத்தகங்களை - பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கையில், மின்னல்களாகத் தோன்றுமே! சாதனையாளர் பட்டியல்... அழகானவர்கள், அதிகாரிகள், நடிகையர், வரலாறுகள்...

வாழ்க்கையில் எந்தப் பிடிப்பும் இல்லாமல் போன பின்பும், படித்தேன், சுயமுயற்சியில் ஈடுபட்டேன்; இன்னல்களை வென்றேன்... இன்று உயர்நிலை... எனக்குள்ளிருந்த ஆர்வம், என்னை இசைத் துறையில் ஈடுபட வைத்தது. சிறு வயதிலேயே எனக்குக் கணிதத்தில் ஈடுபாடு... இன்று... அத்துறையில் என்னால் உயர்பட்டம் பெற முடிந்தது...

இவளுக்கு என்ன இருக்கிறது? தோட்டக்கலை...? ஏன்? சமையல்... ஊறுகாய் போட்டு முன்னேறியவர்கள்... சீட்டுப் பிடித்து வியாபாரம் செய்பவர்கள்... இவள் ஏன் சாக வேண்டும்?

அதிகாலையில் ரேவு, புதியவளாக அந்த வீட்டை விட்டு வெளியேறுகிறாள். அம்பத்தூர் செல்லும் முதல் பஸ்ஸில் இடம் பெறுகிறாள்.

காலைக்காற்று, புத்துயிரளிக்கும் குளிர்ச்சியுடன் முகத்தில் படிகிறது.

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com